# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 8 | 4 Pages | 09.08.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| 4மலர் : 01 | இதழ் : 8 | 4 பக்கங்கள் | 09.08.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இந்திய ஜனநாயகத்திற்கு இது கறுப்பு நாள்: டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆவேசம்



டெல்லி, ஆக. 9

மாநிலங்களவையில் டெல்லி அவசர சட்ட திருத்த மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், இந்த மசோதாவிற்கு ஆதரவாக 131 வாக்குகளும், எதிராக 102 வாக்குகளும் பதிவானது. இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் டெல்லி சேவைகள் மசோதா மாநிலங்களைவயில் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

மசோதா நிறைவேற்றப்பட்ட சிறிது நேரத்திலேயே தொலைக்காட்சியில் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உரையாற்றினார். அப்போது, முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறியதாவது:

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை பிரதமர் மோடி மதிக்கவில்லை. டெல்லி அரசுக்கு எதிராக மத்திய அரசு தலையிடக்கூடாது என்று நீதிமன்றம் தெளிவாக கூறியுள்ளனர். ஆனால் பிரதமர் மோடி நீதிமன்றத்தின் உத்தரவை கேட்க விரும்பவில்லை. சட்டங்களை இயற்றும் அதிகாரம் எங்களிடம் உள்ளது என்று பாராளுமன்றத்தில் அமித் ஷா கூறினார். மக்களுக்காக உழைக்க உங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் உரிமைகளை பறிக்க அல்ல. ஆம் ஆத்மிக்கு எதிராக பாஜக நான்கு கருத்துக் கணிப்புகளில் தோல்வியடைந்தது. அவர்கள் பின்கதவால் டெல்லியில் ஆட்சியைப் பிடிக்க முயலுகின்றனர். இது இந்தியாவின் ஜனநாயகத்திற்கு "கறுப்பு நாள்".இ து டெல்லி மக்களின் வாக்குரிமையை அவமதிக்கும் செயலாகும். டெல்லி சேவைகள் மசோதாவுக்கு எதிராக ஆம் ஆத்மிக்கு ஆதரவளித்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## 2 நாள் பயணமாக வயநாடு செல்கிறார் ராகுல் காந்தி



புதுடெல்லி, ஆக. 9

ராகுல் காந்தியின் எம்.பி. பதவிக்கான தகுதி நீக்கம் ரத்து செய்யப்பட்டது. வரும் 12, 13ந்தேதிகளில் வயநாட்டில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பங்கேற்கிறார்.

மோடிகுறித்தஅவதூறுவழக்கில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு ஜெயில் தண்டனைவிதித்து சூரத் கோர்ட்டு தீர்ப்பளித்தது. இதை தொடர்ந்து வயநாடுதொகுதிஎம்.பி.பதவியில் இருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இந்த நிலையில் உச்சநீதிமன்ற மேல்முறையீட்டு மனு விசாரணையின்போது, ராகுல் காந்தியின் சிறைத்தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும் 2 ஆண்டு ஜெயில் தண்டனைக்கு சுப்ரீம் கோர்ட்டு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. இதை தொடர்ந்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவிக்கான தகுதி நீக்கம் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் எம்.பி. பதவி கிடைத்துள்ளதால் ராகுல் காந்தி 2 நாள் பயணமாக வயநாடு செல்கிறார். வரும்12,13ந்தேதிகளில்வயநாட்டில்நடைபெறும்பொதுக்கூட்டங்களில் பங்கேற்கிறார். லோக்சபா எம்.பி.யாக மீண்டும் பதவியேற்ற பிறகு, ராகுல் காந்தி செல்வது இதுவே முதல் முறையாகும்.

## ஜெர்மனியில் 2ம் உலகப்போர் வெடிகுண்டு கண்டெடுப்பு: 13 ஆயிரம் பேர் வெளியேற்றம்



ஜெர்மனியின் பெரும்பாலான கட்டிடங்கள் போர் முடியும் தறுவாயில் தரைமட்டமானது வெளியெறிய மக்களில் ஒரு சிலர் தங்கள் வளர்ப்பு பிராணிகளையும் கொண்டு சென்றனர்

19ம் நூற்றாண்டின் மத்தியில் 1939லிருந்து 1945 வரை உலகின் பெரும்பாலான நாடுகள், ஆக்ஸிஸ் (Axis) மற்றும் அல்லீஸ் (Allies) என இரு அணிகளாக பிரிந்து நின்று போரிட்டன. இந்த பெரும் போர், இரண்டாம் உலக போர் என அழைக்கப்படுகிறது.

இப்போரில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து 2.7 மில்லியன் டன் வெடிகுண்டுகளை ஜெர்மனி கூட்டணி நாடுகள் மீது வீசின. அதில் பெரும்பகுதி ஜெர்மனி மீது வீசப்பட்டது. இவற்றில் பல வெடித்தாலும் ஒரு சில வெடிக்காமல் பூமியில் புதைந்தன. போர் முடியும் நேரத்தில் ஜெர்மனியின் பெரும்பாலான கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டது. அந்நாட்டில் இதனால் பல வெடிகுண்டுகள் பூமிக்கு அடியில் வெடிக்காமல் புதையுண்டு போனது.

பல தசாப்தங்கள் ஆன பிறகும் ஆங்காங்கே அவற்றில் சில கண்டெடுக்கப்பட்டதாக அவ்வப்போது தகவல்கள் வருவதுண்டு. ஜெர்மனியின் மேற்கு பகுதி நகரமான டஸ்ஸல்டார்ஃப் (Dusseldorf) பகுதியில் உள்ள ஒரு மிருககாட்சி சாலையில் இம்மாதம் முதல் வாரத்தில் 1 டன் எடையுள்ள ஒரு வெடிகுண்டு கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து காவல்துறையும், வெடிகுண்டு நிபுணர்களும் இணைந்து அதனை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகளை திட்டமிட்டனர். இதன் ஒரு பகுதியாக, அந்த குண்டு கிடப்பதாக சொல்லப்படும் இடத்திற்கருகே சுமார் 1640 சதுர அடி சுற்றளவில் (500 meter radius) உள்ள இடங்களில் உள்ள அனைத்து மக்களையும் வெளியேறும்படி அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதனால் சுமார் 13 ஆயிரம் பேர் தற்காலிகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினர். வெளியெறியவர்களில் ஒரு சிலர் தங்கள் வளர்ப்பு பிராணிகளையும் கொண்டு சென்றனர். இந்த நடவடிக்கையின்போது அந்த இடத்தை இணைக்கும் அனைத்து சாலைகளும் மூடப்பட்டது. தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த நடவடிக்கை எப்போது முடிவடையும் என்பதும் தற்காலிக தடை நீக்கப்பட்டதா? என்பது குறித்தும் தற்போது வரை தகவல்கள் இல்லை.

# நீர்வளத்துறை பொறியாளர்களுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



சென்னை, ஆக. 9

வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளையும் பொறியாளர்கள் துரிதமாக மேற்கொள்ள முடியும். நிலஅளவைகள் போன்ற ஆய்வு பணிகளை புவியியல்தகவல்அமைப்புடன்இணைந்து மேற்கொள்ள முடியும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 9 கோட்டங்களுக்கு 9 டி. ஜி.பி.எஸ் கருவிகளையும், 214 கையடக்க ஜி.பி.எஸ். கருவிகளையும் நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பொறியாளர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 5 பொறியாளர்களுக்கு அக்கருவிகளை வழங்கினார். நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 9 கோட்டங்களுக்கு 9 டி. ஜி.பி.எஸ் கருவிகளையும் மற்றும் அப்பிரிவில் உள்ள அனைத்து உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு 214 மடிக்கணினிகள், 214 கையடக்க ஜி.பி.எஸ் கருவிகள் வழங்கப்படுகின்றன. இந்த டி.ஜி.பி.எஸ் கருவிகள் செயற்கை கோள்களில் இருந்து சமிக்ஞைகளைப் பெற்று அதன்மூலம் இருப்பிடத்தை துல்லியமாக அளப்பதால், நீர்பாசன திட்டங்களான தடுப்பணைகள், ஏரிகள், நீர்தேக்கங்கள், கால்வாய்கள் போன்ற அமைப்புகளை அமைத்திட துல்லியமான நிலஅளவைகள் போன்ற ஆய்வு பணிகளை புவியியல்தகவல்அமைப்புடன்இணைந்து மேற்கொள்ள முடியும். வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளையும் பொறியாளர்கள் துரிதமாக மேற்கொள்ள முடியும்.

## கலெக்டரிடம் மனுக்கள் அளிக்க குவிந்த பொதுமக்கள்




திருப்பூர், ஆக. 9

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடையில் இருந்து 579 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் பொது மக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர்உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை, சாலை வசதி, குடிநீர் வசதி என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 579 மனுக்களை பெற்று கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரணை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கலெக்டர் கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சி யில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், தனித்துணைகலெக்டர்(சமூக பாதுகாப்புத்திட்டம்) செல்வி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) விஜயராஜ், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி, துணை கலெக்டர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## இலவச எலும்புமூட்டு நோய் சிகிச்சை முகாம்

திருப்பூர், ஆக. 9

ரோட்டரி கிளப் ஆப் திருப்பூர் ஸ்மார்ட்சிட்டி மற்றும் ஓ.எம்.எஸ். மருத்துவமனை மல்டி ஸ்பெஷாலிட்டி சென்டர் இணைந்து இம்முகாமை நடத்துகிறது. ஆலோசனை மற்றும் சிகிச்சை முகாம் நாளை 9ந்தேதி (புதன்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 2மணி வரை நடைபெறுகிறது.

ரோட்டரி கிளப் ஆப் திருப்பூர் ஸ்மார்ட்சிட்டி மற்றும் ஓ.எம்.எஸ். மருத்துவமனை மல்டி ஸ்பெஷாலிட்டி சென்டர் சார்பில் இலவச எலும்பு மற்றும் மூட்டு நோய் ஆலோசனை மற்றும் சிகிச்சை முகாம் இன்று 9ந்தேதி (புதன்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 2மணி வரை திருப்பூர் பல்லடம் ரோடு வீரபாண்டி பிரிவு ஓ.எம்.எஸ். மருத்துவமனையில் நடக்கிறது.

இதில் சிறப்பு விருந்தினராக திருப்பூர் வீரபாண்டி போலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஆனந்த் கலந்து கொள்கிறார். ஓ.எம்.எஸ்.மருத்துவமனை நிறுவனர் ரவிசந்திரன், ரோட்டரி சங்க நிர்வாகி டாக்டர் அருள் ஜோதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். முகாமில் 40 வயதை கடந்த ஆண்கள் மற்றும் பெண்கள், மாத விலக்கு நின்ற பெண்கள், நிரந்தர கை, கால், வலி உள்ளவர்கள், நிரந்தர முதுகு வலி உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

முகாமில் கலந்து கொள்வோருக்கு இலவசமாக ரூ.1500 மதிப்புள்ள எலும்பு அடர்த்தி சோதனை செய்யப்படும்.

முகாமில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 81100 71747 என்ற செல்போன் எண்ணில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முகாமில் ரோட்டரி சங்க நிர்வாகிகள் ராஜேந்திரன், சிவக்குமார், ரங்கநாதன், இளையராஜா மற்றும் செந்தில்குமார், சண்முக சுந்தரராஜன் உள்பட பலர் பங்கேற்கின்றனர்.

## கள்ளுக்கான தடையை நீக்க கோரி ஜனவரி மாதம் கள் இறக்கி சந்தைப்படுத்தும் போராட்டம் நல்லசாமி அறிவிப்பு



தாராபுரம், ஆக. 9

திருப்பூர்மாவட்டம்தாராபுரத்தில் தமிழ்நாடு 'கள்' இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி நிருபர்களிடம் கூறியதாவது: பனங்கள் ஒரு தடை செய்யக்கூடிய போதை பொருள் அல்ல. பாரம்பரியமான உணவு பொருளான கள் இறக்குவதற்கும், பருகுவதற்கும் அரசு விதித்துள்ள தடையை உடனடியாக நீக்க வேண்டும். ஒரு மரத்துக் கள்ளை 48 நாட்கள் தொடர்ந்து பருகி வந்தால் பல நோய்கள் குணமாகும். எனவே தான் கள்ளுக்குத் தடை கூடாது என்கிறோம். கேரளாவை பின்பற்றி தமிழ்நாட்டிலும், மதுவிலக்கு மற்றும் மதுக்கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும். 202324ம் ஆண்டுக்கான மதுக் கொள்கையை முடிவு செய்வதற்காக கேரள முதல்மந்திரி பினராயி விஜயன் தலைமையில் அமைச்சரவை கூட்டம் ஜூலை 25ந்தேதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநிலம் முழுவதும் 'கள்' இறக்குவதற்கும், விற்பனை செய்வதற்கும் முக்கியத்துவம் அளிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.குறிப்பிட்ட நாட்களுக்குள் விற்பனை ஆகாமல் மீதமாகும் கள்ளை வீணாக்காமல், அதிலிருந்து வினிகர் உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பொருட்களையும் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டது. கள்ளுக்கடைகளை திறக்க கோருவதுவும், கள்ளுக்கு அரசிடம் அனுமதி கேட்பதுவும் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 47க்கு எதிரானதுடன் கள்ளுக்கடைக்கு தடை விதிக்கக்கூடாது. இவற்றை முன்னிறுத்தி வருகிற ஜனவரி மாதம் 21 ந்தேதி முதல் தமிழ்நாடு முழுவதும் 'கள் இறக்கி சந்தைப்படுத்தும் அறப்போராட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## சுற்றுலா விருதுக்கு தகுதியான தொழில் முனைவோர் விண்ணப்பிக்கலாம்

திருப்பூா், ஆக. 9

திருப்பூா் மாவட்டத்தில் சுற்றுலா விருதுக்குத் தகுதியான தொழில் முனைவோா் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்து ராஜ் தெரிவித்துள்ளாா். இது குறித்து அவா் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு: தமிழக சுற்றுலாத் துறை அமைச்சா் அறிவிப்பின்படி ஒவ்வோா் ஆண்டும் சுற்றுலாத் தொழில்முனைவோருக்கு சுற்றுலா விருது வழங்குவதற்கான வழிகாட்டுதல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை உலக சுற்றுலா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் சுற்றுலாத்தொழில் முனைவோருக்கு விருதுகளை வழங்கி வருகிறது. இந்த விருதுகளானது சுற்றுலா ஆபரேட்டா்கள், விமானநிறுவனங்கள், ஹோட்டல்கள், உணவகங்கள், சுற்றுலா வழிகாட்டிகள், மாநிலத்தின் சுற்றுலாவை மேம்படுத்துவதில் சாதகமாக பங்களிக்கும் சுற்றுலா நிறுவனங்களுக்கு வழங்கப்படும். ஆகவே, திருப்பூா் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலாத் தொழில் முனைவோரும் சுற்றுலா விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பங்களை https://tntourismawards.com/ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து வரும் ஆகஸ்ட் 15 ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குப்பை, கட்டிட கழிவுகளால் நிரப்பப்படும்: சென்னை ஏரிகள்

சென்னை, ஆக. 9

சேர்ந்தே இருப்பது... குப்பை மேடும் கோபுரங்களும்... சேராது இருப்பது... சுத்தமும், சுகாதாரமும்... கண்டுகொள்வது... கடற்கரையும் காதலர்களும்... கண்டுகொள்ளாதது... கண்ட கண்ட இடங்களில் குப்பைகளையும் கழிவுகளையும் கொட்டுவதை. இது தான்சென்னையின்நிலை. அழகான நகரம் இப்படி அலங்கோலப்படுத்தப்படுவது தடுக்கப்படுமா? இந்த நகரத்தின் அழகு மீட்டெடுக்கப்படுமா? என்ற ஏக்கம் சென்னை வாசிகளிடம் நெடு நாளாகவே இருக்கிறது.

ஆனால் அழகை மீட்பதற்கு பதில் நாளுக்கு நாள் சிதைத்து தான் வருகிறார்கள்.நகரம்விரிவடைந்தது. கூடவே நிழல் போல் நரக சூழலும் தொடர்ந்தது என்றுதான் சொல்ல வேண்டும். விரிவாக்கத்தின் அடையாள ரேகை போல் குரோம்பேட்டையில் இருந்து துரைப்பாக்கம் வரை 200 அடி ரேடியல் ரோடு உருவாக்கப்பட்டது.

இந்தச் சாலை அமைந்த பிறகு அந்தப் பகுதியில் வளர்ச்சி மின்னல் வேகத்தில் உயர்ந்தது. அதே நேரம் மிகப்பெரிய நீர் நிலையாக இருந்த ஏரி சாலை அமைக்கப்படுவதற்காக பாதி அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வமாக ஆக்கிரமிக்கப்பட்டது. மிச்சமிருந்த ஏரி குப்பை கொட்டும் வளாகம் போல் மாறிவிட்டது. குப்பைகள் கட்டிட கழிவுகள் டன் கணக்கில் குவிக்கப்பட்டு இப்போது அந்த ஏரி குப்பை மலையாக மாறி இருக்கிறது. அங்கிருந்து துரைப்பாக்கம் வழியாக பள்ளிக்கரணை சென்றால் மிகப் பெரிய குப்பை கிடங்கு இருக்கிறது. லட்சக்கணக்கான டன் குப்பை குவிந்து சில கிலோ மீட்டர் தூரத்திற்கு மலை போல் உயர்ந்து காட்சியளிக்கிறது.



இந்த குப்பை கிடங்குகள் காரணமாக சதுப்பு நில பகுதி முற்றிலும் பாழ்பட்டு கிடக்கிறது. இந்தப் பகுதி ஐ.டி.நிறுவனங்கள் நிறைந்த பகுதி மழை பெய்தால் தண்ணீரில் கலந்து துர்நாற்றம் வீசும்... வெயில் அடித்தால் நெருப்பு பற்றிக் கொள்ளும். அதில் இருந்து வெளியேறும் புகை வழியாக துர்நாற்றம் வரும். இப்படி ஆண்டு முழுவதும் இந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசிக் கொண்டே இருக்கும். 12 ஏக்கர் பரப்பளவில் நான் கைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை கடல் போல் நீர் நிரம்பி காணப்பட்டது செம்மஞ்சேரி ஏரி. பார்ப்பதற்கே அவ்வளவு அழகாக இருக்கும்.

அதன் பிறகு மெல்ல மெல்ல இந்த ஏரி ஆக்கிரமிக்கப்பட்டது. 30 சதவீதத்துக்கும் மேற்பட்ட பகுதி கட்டிட இடிபாடுகளை கொட்டி கட்டாந்தரை போல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு கட்டப்பட்டு உள்ளது. அதற்கு விதிப்படி தேவையான இடத்தை ஏரியில் இருந்து எடுத்து சுற்றுச் சுவரும் கட்டப்பட்டு உள்ளதாக பசுமை தாயகம் அமைப்பின் மாவட்டச் செயலாளர்நிர்மல்குமார்கூறினார். அந்த பகுதி யில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயும் இந்த ஏரியில் கொண்டு விடப்பட்டு உள்ளது.

ஏற்கனவே தூர்ந்து போன ஏரியில் மழைக்காலங்களில் தண்ணீர் வரும் போது அந்த கால்வாய் வழியாக தண்ணீர் வெளியேறி குடியிருப்பு பகுதிகளை மூழ்கடிக்கும் என்கிறார்கள். தற்போது கெட்டப்படும் கட்டிட கழிவுகளை கண்டு கொள்ளாமல் இருந்தால் ஒரு கட்டத்தில் பிளாட் போட்டு விற்கப்படும் என்கிறார்கள். இப்படித்தான் சோழிங்கநல்லூரில் பல குட்டைகள் காணாமல் போய்விட்டதாக ஆதங்கப்பட்டார் நிர்மல்குமார். தென் சென்னையிலேயே இப்படியென்றால் வட சென்னையை கேட்க வேண்டியதில்லை. ஏற்கனவே கொடுங்கையூர் குப்பைக் கிடங்கு கொடுமையை அந்த பகுதி வாசிகள் அனுபவித்து வருகிறார்கள். இதே போல் மிகப்பெரிய நீர் ஆதாரமான ரெட்டேரி ஏரியும் கட்டிட கழிவுகளை கொட்டும் வளாகமாக மாற்றப்பட்டது. பொது மக்கள் போராட்டத்தால் ஓரளவு குறைந்தாலும் ஏரியை சுற்றி ஏராளமான கட்டிட கழிவுகள் லாரி, லாரியாக கொண்டு வந்து கொட்டப்படுகிறது. தனியார் மற்றும் அரசு கட்டுமான பணிகளை செய்து வரும் ஒப்பந்ததாரர்கள் கட்டிட கழிவுகளை இந்த பகுதியில் கொட்டுகிறார்கள். அதை பின்னர் அங்கிருந்து அப்புறப்படுத்துவதில்லை. ரெட்டேரி ஏரியின் தென் கரையோரம் பெரம்பூர்ரெட்ஹில்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சி உர உற்பத்தி மையத்தை ஒட்டியுள்ள 3 இடங்களில் கட்டிட இடிபாடுகள்மட்டுமில்லாமல் ஏராளமான கழிவுப் பொருட்களும் இந்த பகுதியில் கொட்டி குவிக்கப்பட்டுள்ளது. இதனை மாநகராட்சி அதிகாரிகள் யாரும் கண்டு கொள்வதில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். புதிய நீர் நிலைகளை உருவாக்குவது கடினம். இருக்கும் நீர் நிலைகளை யாவது பாது காப்பதில் கவனம் செலுத்தலாமே.

# அ.தி.மு.க., பொன்விழா மாநாடு: ஆலோசனை கூட்டம்

உடுமலை, ஆக. 9

அ.தி.மு.க., பொன் விழா மாநாடு வரும் 20 ந்தேதி மதுரையில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு முன்னாள் அமைச்சரும் உடுமலை எம்எல்ஏ.வுமான ராதாகிருஷ்ணன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அப்போது அதிமுக., நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பாக நடத்தி கொடுக்க வேண்டும் என கூறினார்.



மேலும் மாநாட்டுக்கு செல்லும் மோட்டார்சைக்கிள், நான்கு சக்கர வாகனங்களுக்கான ஸ்டிக்கர் , சிறப்பு பாஸ்களையும் உடுமலை ராதாகிருஷ்ணன் எம்எல்ஏ., வழங்கினார். இதில் பல்லடம் முன்னாள் எம்எல்ஏ., கரைபுதூர் நடராஜன்,

உடுமலை நகர செயலாளர் ஹக்கீம், மாவட்டக் இணை செயலாளர் சாஸ்திர சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜ் ,முருகேசன், பிரனேஸ், பொள்ளாச்சி ஒன்றிய கழக செயலாளர் இளஞ்செழியன், ஆவல் பட்டி நட்ராஜ், சோமசுந்தரம், உடுமலை, பொள்ளாச்சி, குடிமங்கலம், பல்லடம் நகர ஒன்றிய செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.

# துப்புரவு பணியாளர்களுக்கு நல உதவி

பல்லடம், ஆக. 9

கருணாநிதியின் உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. துப்புரவு பணியாளர்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி 5வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பல்லடம் 2 வது வார்டு பகுதியில், கருணாநிதியின் உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.



இதைத்தொடர்ந்து திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், மாவட்ட திட்டக்குழு உறுப்பினருமான செ.ராஜசேகரன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவியாக துப்புரவு பணியாளர்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் பல்லடம் நகர திமுக., செயலாளர் ராஜேந்திர குமார்,வார்டு செயலாளர்கள் பாலகிருஷ்ணன், பிரகாஷ், கிருஷ்ணசாமி, இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் குமார்,மற்றும் லாரி முருகசாமி, பரமசிவம், சிலம்பரசன், மற்றும் நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பக்கவாத நோய்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு பிசியோதெரபி நிபுணர்களை நியமிக்க கோரிக்கை

தாராபுரம்,ஆக.9

அரசு மருத்துவமனைகளில் பக்கவாத நோய்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய பிசியோதெரபி நிபுணர்களை நியமிக்க வேண்டும் என பிசியோதெரபிஸ்ட் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு பிசியோதெரபி மருத்துவர்கள் சங்கம் சார்பில் செயலாளர் டாக்டர் ராஜேஸ் கண்ணா கூறியதாவது: அதிகரித்து வரும் சர்க்கரை நோயின் தாக்கம், உயர் ரத்த அழுத்தம், மாறிவரும் உணவுப் பழக்க வழக்கங்கள், மன அழுத்தம் காரணமாக பக்கவாதத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அறிகுறிகள் தெரிந்த, நான்கரை மணி நேரத்துக்குள் சிகிச்சை அளித்தால் முழுமையாக குணப்படுத்தவோ, பாதிப்பை குறைக்கவோ முடியும். பக்கவாத பாதிப்பு தமிழகத்தில் அதிகரிக்க, அரசு மருத்துவமனைகளில் போதிய பிசியோதெரபி மருத்துவர்கள் இல்லாதது, பொதுமக்களிடம் விழிப்புணர்வு இல்லாததே காரணம். இதனால் கிராமப்புறத்தினர் இந்நோயால் பாதிக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் உடல் ஊனத்துடனே வாழ வேண்டிய சூழல் உள்ளது. அறிகுறிகள் தெரிந்த உடனே சிகிச்சை அளிக்க ஆரம்ப, வட்டார மருத்துவமனைகளில் போதிய மருத்துவ வசதிகள் இல்லை. பிசியோதெரபிஸ்ட்டுகளும் நியமிக்கப்படவில்லை. மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளிலும் ஒரு சில பிசியோதெரபிஸ்டுகளே உள்ளனர்.

இந்நிலை நீடித்தால், தமிழகத்தில் பக்கவாதத்தால், உடல் ஊனம் அடைபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உடனடியாக, பிசியோதெரபிஸ்டுகளை நியமிக்க வேண்டும். பயிற்சி பிசியோதெரபிஸ்டுகளை ஊக்கஊதியத்துடன்தற்காலிகமாக பணியில் அமர்த்தவும் உத்தரவிட வேண்டும். பொது மக்களிடம் பக்கவாதம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரையை தொடர்ந்து நெல்லை பா.ஜனதா பொதுக்கூட்டமும் ரத்து? நடைபயணத்தில் கூடுதல் கவனம் செலுத்த முடிவு

சென்னை, ஆக. 9

தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை கடந்த 28ந்தேதி ராமேசுவரத்தில் நடைபயணம் தொடங்கினார். 5 கட்டங்களாக வருகிற ஜனவரி மாதம் வரை நடைபெறும் இந்த யாத்திரையை மத்திய மந்திரி அமித்ஷா தொடங்கி வைத்தார். முதல் கட்ட யாத்திரை வருகிற 22 ந்தேதி நெல்லையில் முடிவடைகிறது. நேற்று முன் தினம் ஓய்வு என்பதால் அண்ணாமலை சென்னை புறப்பட்டு வந்தார். நேற்று மதுரையில் பொதுக்கூட்டம் நடைபெறுவதாகவும், அந்த கூட்டத்தில் மத்திய மந்திரி மன்சுக்



மாண்டவியா கலந்து கொண்டு பேசுவதாகவும் இருந்தது.

ஆனால் பாராளுமன்ற கூட்டம் காரணமாக மத்திய மந்திரி வர இயலவில்லை. இதனால் அந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது. அண்ணாமலையின் யாத்திரை இன்று தொடங்குவதாக இருந்தது. இப்போது அதுவும் நாளைக்கு தள்ளி வைக்கப்பட்டு உள்ளது. நாளை விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் இருந்து தொடங்குவார் என அறிவிக்கப்பட்டது. வருகிற19ந்தேதிநெல்லை மாவட்டத்தில் நடைபயணம் தொடங்குகிறது. 21 ந்தேதி ஓய்வு, 22ந்தேதி நெல்லையில் பொதுக் கூட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது அந்த கூட்டமும் ரத்து செய்யப்பட்டு உள்ளது. மத்திய மந்திரிகள் வருவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எனவே பொதுக்கூட்டங்கள் நடத்துவதை விட்டுவிட்டு நடைபயணத்தில் கூடுதல் கவனம் செலுத்தும்படி டெல்லி மேலிட தலைவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளார்கள்.

# அரசு மருத்துவமனைகளில் டாக்டர்கள் சரியான நேரத்தில் வருகிறார்களா? கண்காணிக்க அதிரடி உத்தரவு

திருப்பூர், ஆக. 9

தமிழகத்தில் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் உள்ளன.

இங்கு சிகிச்சைக்காக ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வந்து செல்கின்றனர். மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ கல்லூரி மருத்துவம னைகளில் பணியாற்றும் ஒரு சில டாக்டர்கள் சரியான நேரத்துக்கு வராமலும் சிலர் 3 நாட்களுக்கு ஒரு முறை பணிக்கு வந்து வருகை பதிவேட்டில் பணிக்கு வராத நாட்களிலும் கையொப்பமிடுவதாக புகார்கள் அரசுக்கு தொடர்ந்து சென்றது.

இதையடுத்து அரசு டாக்டர்களின் வேலை நேரத்தை கண்காணிக்குமாறு மாவட்ட கலெக்டர்களுக்கு சுகாதார செயலாளர் ககன்தீப்சிங் பேடி கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில் மாவட்ட, தாலுகா, தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் உள்ள தலைமை டாக்டர்கள் காலை 7:30 மணி முதல் மதியம் 1:30 மணி வரையிலும், மாலை 3மணி முதல் மாலை 5 மணி வரையிலும் நிர்வாக பணியில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

இதர டாக்டர்கள் காலை 7:30 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் இருப்பதை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மருத்துவமனைகளில் டாக்டர்கள் பணி நேரங்களில் இல்லையா, மருத்துவ சேவை குறைகள்,

அரசு மருத்துவமனையில் லஞ்சம் கேட்கிறார்களா உள்ளிட்ட புகார்கள் இருந்தால் உடனே பொதுமக்கள் 104க்கு தகவல் தெரிவிக்கலாம் என்ற தகவலும் பரவி வருகிறது.

# செந்தில் பாலாஜி வழக்கை செப்டம்பர் 30ந் தேதிக்குள் முடிக்க வேண்டும்: சுப்ரீம் கோர்ட்டு அதிரடி உத்தரவு

புதுடெல்லி, ஆக. 9

சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் செந்தில் பாலாஜி வழக்கு விசாரணையை முடிக்க மேலும் 6 மாத காலம் அவகாசம் வேண்டும் என்று கேட்டனர். மத்திய குற்றப்பிரிவு போலீஸ் தரப்பில் ½ மணி நேரம் அவகாசம் கேட்கப்பட்டது.

அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள்விசாரணையை தீவிரப்படுத்தி உள்ள நிலையில் செந்தில் பாலாஜி மீது மத்திய குற்றப்பிரிவு போலீசார் போட்டுள்ள வழக்கு விசாரணையும் சூடு பிடித்துள்ளது. போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாக ஏமாற்றி பணம் வாங்கிக் கொண்டு மோசடியில் ஈடுபட்டதாக அமைச்சர் செந்தில்பாலாஜிமீதுசென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் தனியாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்பேரில்போடப்பட்டு உள்ள இந்த வழக்கு விசாரணையை 2 மாதத்துக்குள் முடிக்க வேண்டும்என்றுசுப்ரீம்கோர்ட்டு கடந்த மே மாதம் 16ந் தேதி உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் இந்த வழக்கு விசாரணை இன்று நடைபெற்றது. அப்போது சென்னை மத்திய



குற்றப்பிரிவு போலீசார் செந்தில் பாலாஜி வழக்கு விசாரணையை முடிக்க மேலும் 6 மாத காலம் அவகாசம் வேண்டும் என்று கேட்டனர்.

இதனை கேட்டு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் அமர்வு கடும் அதிருப்தி அடைந்தது. ஏற்கனவே வழங்கிய 2 மாத அவகாசம் முடிந்துள்ள நிலையில் அதைவிட 3 மடங்கு கால அவகாசம் கேட்பது எந்த வகையில் நியாயம்? என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், நீங்கள்நினைத்தால் ஒரு வழக்கு விசாரணையை 24 மணி நேரத்திலும் முடிக்கலாம். 24 ஆண்டுகள் ஆனாலும் முடிக்காமல் இழுக்கலாம் என்று தெரிவித்தனர். எனவே உங்கள் டி.ஜி.பி.யையும் உள்துறை செயலாளரையும் நேரில் வரச் சொல்லுங்கள். இன்னும் எத்தனை நாள் அவகாசம் வேண்டும் என்று கேட்கட்டும் என்று உத்தரவிட்டனர். இதையடுத்து மத்திய குற்றப்பிரிவு போலீஸ் தரப்பில் ½ மணி நேரம் அவகாசம் கேட்கப்பட்டது.

பின்னர் கோர்ட்டுக்கு வந்து முறையிட்ட போலீசார் மேலும் 3 மாதங்கள் அவகாசம் கேட்டதுடன் டி.ஜி.பி., உள்துறை செயலாளர் ஆஜராக உத்தரவிட்டதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இதையடுத்து டி.ஜி.பி.யும் உள்துறை செயலாளரும் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவை வாபஸ் பெற்ற நீதிபதிகள், 3 மாதம் அவகாசம் வழங்க முடியாது என்றும் செப்டம்பர் 30ந் தேதிக்குள் வழக்கு விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். அதற்குள் நீங்கள் முடிக்காவிட்டால் சிறப்பு புலனாய்வு விசாரணை உத்தரவிட நேரிடும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பின்னலாடை வர்த்தகம் செய்ய கார்பன் கிரெடிட் கார்டு சான்றிதழ் பெறுவது அவசியம்: பியோ தலைவர் அறிவுறுத்தல்

திருப்பூர், ஆக. 9

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சர்வதேச ஜவுளி கொள்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. காற்று, நிலம், நீர் மாசுபடாமல் ஜவுளி பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிபந்தனை முக்கியமானது. கொரோனாவுக்கு பிறகு இயற்கை மாசு ஏற்படுத்தாத பசுமை சார் உற்பத்தி என்ற அங்கீகார தரச்சான்று இருக்கும் ஆடைகளையே வெளி நாட்டு மக்கள் வாங்கி அணிகின்றனர். திருப்பூரில் இயங்கும் பின்னலாடை ஏற்றுமதி நிறுவனம், சாய ஆலைகள், பிரின்டிங் ஆலைகளும் புதிய அங்கீகாரதரச்சான்று பெற வேண்டியது கட்டாயமாகி விட்டது.

கிரீன் டேக் என்பது சில ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது. தற்போது கார்பன் கிரெடிட் என்ற சான்றும்அவசியமாகிறது. சாய ஆலைகள், பிரின்டிங் நிறுவனங்கள் பயன்படுத்தும் இங்க் மற்றும் ரசாயனத்தின் தன்மை, இயற்கைக்கு கேடு



விளைவிக்காத ஒன்றாக இருக்க வேண்டும். அதற்காக கார்பன்கிரெடிட்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். குறிப்பிட்ட நாடுகளில் கார்பன் கிரெடிட் சான்றிதழ் இருந்தால் மட்டுமே எதிர்காலத்தில் வர்த்தகம் செய்ய முடியும். இயற்கையை போற்றி பாதுகாக்க வேண்டும் என பல்வேறு நாட்டு மக்களும் விரும்புகின்றனர். ஜீரோ டிஸ்சார்ஜ் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்படுத்தும் திருப்பூர் அவர்களின் தேர்வாக இருக்கிறது. இனிவரும் நாட்களிலும் ரசாயன பயன்பாடு, இங்க் பயன்பாடு உள்ளிட்ட பணிகளிலும் அங்கீகார தரச்சான்று பெற்றிருக்க வேண்டியதும் அவசியமாகி யுள்ளது. இது குறித்து இந்திய ஏற்றுமதியாளர் கூட்டமைப்பு (பியோ) தலைவர் சக்திவேல் கூறுகையில், பல்வேறு வளர்ந்த நாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. அதன்படி அங்கீகார தரச்சான்று பெற்றிருந்தால் மட்டுமே வர்த்தகம் செய்கின்றனர். தூய ரசாயனம் தூய செயலாக்கம் தூய தயாரிப்பு என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்து கின்றனர். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து காற்று, நீர், நிலம் மாசுபடாத உற்பத்தி என்ற தரச்சான்று அவசியம். அதற்காக அடல் இன்குபேஷன் மையம் உதவியுடன் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற தரச்சான்று நிறுவனங்களை தேர்வு செய்து பயன்படுத்தலாம் என்றார்.

# "மக்களைத் தேடி மேயர்" திட்டத்தின்கீழ் திருவொற்றியூர் மண்டலத்தில் 10ந்தேதி மேயர் பிரியா பொதுமக்களிடம் குறை கேட்கிறார்

சென்னை, ஆக. 9

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது: சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகளைகளையும் பொருட்டு, "மக்களைத் தேடி மேயர்" திட்டம் 3.5.2023 அன்று மண்டலம்5ல் தொடங்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 31.5.2023 அன்று மண்டலம் 6 லும், 5.7.2023 அன்று மண்டலம்13லும் சம்பந்தப்பட்ட மண்டலங்களில்



உள்ள பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மக்களைத் தேடி மேயர் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டல அலுவலகத்தில் 10.8.2023 அன்று (வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மேயர் பிரியா மண்டலம் 1 க்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து நேரடியாக கோரிக்கை மனுக்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள உள்ளார். எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட பொதுமக்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி சாலை வசதி, மழைநீர்வடிகால் வசதி, மின் விளக்கு, கழிப்பிடம், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ், சொத்துவரி மற்றும் தொழில் வரி, குப்பைகள் அகற்றம், ஆக்கிரமிப்பு அகற்றுதல், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் உள்ளிட்ட மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்த கோரிக்கை மனுக்களை மேயரிடம் நேரடியாக வழங்கி பயன் அடைந்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஸ்ரீரங்கம் கோபுர சுவர் இடிந்த விவகாரம்: தி.மு.க. அரசு மீது எச்.ராஜா பகீர் குற்றச்சாட்டு

திருச்சி, ஆக. 9

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் கடந்த 5ந்தேதி நள்ளிரவு அங்குள்ள கிழக்கு கோபுரத்தின் கொடுங்கை இடிந்து விழுந்தது. அதனை தொடர்ந்து கோபுரத்தை புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை பாரதிய ஜனதா கட்சி மூத்த தலைவர் எச். ராஜா நேரில் பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது, புகழ்பெற்ற ஸ்ரீரங்கம் கோவில் 56 நிலைகள் மாற்றம் செய்யப்பட்டது. இதில் பெரும் ஊழல் நடைபெற்றுள்ளது. இதில்



முன்னாள் இணை ஆணையர் ஜெயராமனுக்கு பெரும் பங்கு உள்ளது. ஆனாலும் அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு முறை கேடுகள் செய்துள்ள ஜெயராமனை பதவி நீக்கம் செய்ய வேண்டும். கடந்த இரண்டு ஆண்டு காலமாக ஸ்ரீரங்கம் கோவிலில் அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் பல்வேறு பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே உடனடியாக அறங்காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்து கோவில்கள் மீது அறநிலையத்துறைக்கு அக்கறை இல்லை. ஸ்ரீரங்கம் அரங்கநாத சாமி கோவிலில் தாமரைக் கோலம் போட அனுமதி மறுத்த ஸ்ரீரங்கம் கோவில் மேலாளர் தமிழ்ச்செல்வி மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தி.மு.க. ஐந்தாண்டு கால ஆட்சியை நிறைவு செய்யும் போது கோவில்களில் உள்ள தங்கம், சொத்துக்கள் எதுவும் இருக்கக் கூடாது என்பதே அவர்களின் நோக்கம் என்று அவர் தெரிவித்தார்.

# இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட மண்டபம் மீனவர்கள் 9 பேர் விடுதலை

ராமேசுவரம், ஆக. 9

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் கடந்த மாதம் 25ந்தேதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் இந்திய கடல் எல்லையை ஒட்டியுள்ள கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை விரட்டி அடித்ததோடு, எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக கூறி பாம்பன், மண்டபத்தை சேர்ந்த ஆறுமுகம், மணிகண்டன், குமார், வேலு, ஜெயசீலன், முத்து, இருளாண்டி உள்பட 9 மீனவர்களை



கைது செய்து படகையும் சிறை பிடித்து சென்றனர்.

இலங்கையில் உள்ள ஊர்க்காவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட மீனவர்கள் நீதிபதி உத்தரவுப்படி யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக்கோரி ராமேசுவரம், மண்டபம் மீனவர் சங்கத்தினர் மத்திய மாநில அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினார். இந்த நிலையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த மண்டபம் மீனவர்கள் 9 பேரும் ஊர்க்காவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது வழக்கை விசாரித்த நீதிபதி மீண்டும் இலங்கை கடல் எல்லையில் மீன் பிடிக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் 9 மீனவர்களையும் விடுதலை செய்வதாக உத்தரவிட்டார். இதையடுத்து விடுதலையான 9 பேரும் இன்னும் ஓரிரு நாட்களில் நாடு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அன்புமணி ராமதாஸ் கைகட்டி மத்திய அரசுக்கு அடிமையாக இருப்பது ஏன்? அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி

சென்னை, ஆக. 9



அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"என்.எல்.சி விரிவாக்கத் திட்டத்தை கைவிடும் எண்ணம் இல்லை" என மத்திய நிலக்கரித்துறை மந்திரி பிரகலாத் ஜோசி மாநிலங்களவையில் அறிவித்திருக்கிறார்.

அதுவும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. கேட்ட கேள்விக்கு அவ்வாறு எழுத்துப்பூர்வமான பதிலை தெரிவித்துள்ளார். சென்னையில் "வீராவேசம்" செய்யும் அன்புமணி ராமதாஸ், டெல்லியில் கைகட்டி நின்று மத்திய அரசுக்கு அடிமையாக இருப்பது ஏன்? டெல்லி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மருத்துவக் கல்லூரி வழக்கா? அல்லது அந்த நிலுவையில் உள்ள வழக்கை வைத்து அமலாக்கத்துறை கைது செய்துவிடப் போகிறது என்ற கலக்கமா? இங்கே "மண்ணையும், மக்களையும் காப்போம்" என்றவர் டெல்லியில் முகத்திற்கு நேராக, "என்.எல்.சி விரிவாக்கத் திட்டத்தைக் கைவிடமாட்டோம்" என்று மத்திய பா.ஜ.க. மந்திரி, அதுவும் அன்புமணி ராமதாசே விரும்பி இடம் பெற்றுள்ள "டெல்லி தேசிய ஜனநாயகக் கூட்டணியின்" மந்திரி அறிவித்த பிறகும், ஏன் எழுத்துப்பூர்வமாக மாநிலங்களவையில் தெரிவித்த பிறகும், பெட்டிப் பாம்பு போல் அடங்கி கிடப்பது ஏன்? தைரியம் இருந்திருந்தால்,

அவர் சென்னையில் பேசுவதும் போராடுவதும் உண்மையென்றால், குறைந்தபட்சம் மாநிலங்களவையில் இருந்து வெளி நடப்பாவது செய்திருக்க வேண்டாமா? அதிகபட்சமாக "இனி நாங்கள் டெல்லி அளவில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியிலும் இல்லை" என்று அறிவித்து விட்டு விமானம் ஏறிச் சென்னைக்கு வந்திருக்க வேண்டாமா? வட மாவட்ட மக்களின் நலனுக்கும், உழவர்களின் உரிமைகளுக்காகவும் எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓயாது உழைக்கிறார். மத்திய அரசுடன் போராடி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இன்னும் மாநில அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மண்ணையும், மக்களையும் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார் என்று நம்பியிருக்கும் உழவர்களை, வட மாவட்ட மக்களைஉங்களின் இது போன்ற "கபட நாடகங்கள்" மூலம் திசைதிருப்பி விட முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.


இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நிலுவையில் உள்ள வழக்கை வைத்து அமலாக்கத்துறை கைது செய்துவிடப் போகிறது என்ற கலக்கமா? தைரியம் இருந்திருந்தால், அவர் சென்னையில் பேசுவதும்போராடுவதும் உண்மையென்றால், குறைந்தபட்சம் மாநிலங்களவையில் இருந்து வெளி நடப்பாவது செய்திருக்க வேண்டாமா?

# சுதந்திர தினத்தை முன்னிட்டு சீதாப்பழத்தில் தேச தலைவர்களின் ஓவியங்களை வரைந்து அசத்திய வாலிபர்

குனியமுத்தூர், ஆக. 9

சுதந்திர தினம் வருகிற 15ந் தேதி நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி தற்போது சுதந்திர தின நிகழ்ச்சிகள் களைகட்ட தொடங்கி உள்ளன. இதன் ஒருபகுதியாக கோவையை சேர்ந்த வாலிபர் ஒருவர் சீதாப்பழத்தில் சுதந்திரத்துக்காக பாடுபட்ட 20 தலைவர்களின் ஓவியங்களை வரைந்து அசத்தி உள்ளார். கோவை குனியமுத்தூரை சேர்ந்தவர் ராஜா. ஓவியரான இவர் பல்வேறு ஓவியங்களை வரைந்துள்ளார். தற்போது சுதந்திர தினம் வருவதை முன்னிட்டு சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்களை ஓவியமாக வரைய விரும்பினார். அதுவும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என யோசித்த அவர், சீதாப்பழத்தில் 20 தலைவர்களின்



ஓவியத்தை வரைந்தால் என்ன என்ற யோசனை அவருக்கு தோன்றியது. இதையடுத்து அவர் சீதாப் பழங்களை வாங்கி வந்தார். அதில் பச்சை, ஆரஞ்சு, வெள்ளை, நீலம், சிவப்பு ஆகிய வண்ணங்களை கொண்டு தலைவர்களின் படம் மற்றும் தேசியை கொடியை வரைந்தார். ஒவ்வொரு சீதாப்பழத்திலும் ஒவ்வொரு தலைவர்களின் படங்களை வரைந்தார். அதன்படி சீத்தாப்பழத்தில் மகாத்மாகாந்தி, சுபாஷ் சந்திரபோஸ், சுப்பிரமணிய பாரதியார், விவேகானந்தர், வீரபாண்டி கட்டப்பொம்மன், வேலுநாச்சியார், வ.உ.சிதம்பரனார், மருது பாண்டியர், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு, பகத்சிங், ராஜேந்திரபிரசாத், சர்தார் வல்லபாய்படேல், பாலகங்காதர திலகர், அப்துல்கலாம், சந்திரசேகர ஆசாத், காமராஜர், ராதாகிருஷ்ணன், லாலா லஜபதி ராய், அபுல்கலாம் ஆசாத் உள்ளிட்ட தலைவர்களின் படங்களை ஓவியமாக வரைந்துள்ளார். இதுகுறித்து ஓவியர் ராஜா கூறியதாவது: சுதந்திர தினத்தையொட்டி ஆண்டுதோறும் வித்தியாசமாக ஓவியங்கள் வரைந்து வருகிறேன். இதற்கு முன்பாக மூங்கில், பேட்டரி செல், தங்கம், மெழுகு, மாத்திரை மற்றும் மாம்பழம் ஆகியவற்றில் ஓவியங்கள் வரைந்து சாதனை படைத்து உள்ளேன். அந்த வகையில் நடப்பாண்டும் இளைஞர்கள் மத்தியில் தேசத்தலைவர்கள் மற்றும் தேசப்பற்றை நினைவுகூரும் வகையில் சீத்தாப்பழத்தில் தேசியக்கொடிகளுடன் 20 தலைவர்களின் படங்களை ஓவியமாக வரைந்து உள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சுதந்திர தினத்துக்கு 1 லட்சம் போலீஸ் பாதுகாப்பு சென்னையில், வணிக வளாகங்கள், கோவில்களில் கண்காணிப்பு

சென்னை, ஆக. 9

சுதந்திர தின விழா முடியும் வரையில் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே போலீசார் விடுமுறை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சோதனை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் 16 ந்தேதி வரை நீடிக்கும் என்று போலீசார் தெரிவித்து உள்ளனர்.

நாடு முழுவதும் வருகிற 15ந்தேதி சுதந்திர தின கொண்டாட்டங்கள் களை கட்ட உள்ளன. இதையொட்டி தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கும் நிலையில், தமிழகத்தில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சென்னையில் 15 ஆயிரத்துக்கும் மேற்



பட்ட போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடைபெற்று விடாமல் தடுக்கும் வகையில் வாகன சோதனை, தங்கும் விடுதிகளில் சோதனை ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவின் பேரில் மாநகர் முழுவதும் இரவு ரோந்து பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வாகன சோதனையின் போது சந்தேக நபர்கள் சுற்றி திரிந்தால் அவர்களை போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று இன்ஸ்பெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். திருவல்லிக்கேணி, பெரியமேடு, எழும்பூர், கோயம்பேடு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சந்தேகத்துக்கிடமான லாட்ஜுகளில் யாராவது தங்கி இருக்கிறார்களா? என்பதை கண்டறிய திடீர் சோதனையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுதந்திர தின விழா முடியும் வரையில் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே போலீசார் விடுமுறை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வணிக வளாகங்கள், கோவில்கள் ஆகியவற்றில் பாதுகாப்பை பலப்படுத்தி போலீசார் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். இந்த சோதனை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் 16 ந்தேதி வரை நீடிக்கும் என்று போலீசார் தெரிவித்து உள்ளனர்.

# இடிந்து விழுந்த ஸ்ரீரங்கம் கிழக்கு கோபுர கொடுங்கை பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்: அமைச்சர் சேகர்பாபு பேட்டி

திருச்சி, ஆக. 9

ஸ்ரீரெங்கம் ரெங்கநாதர் கோவிலில் கடந்த 5ந் தேதி நள்ளிரவு அங்குள்ள கிழக்கு கோபுரத்தின் கொடுங்கை இடிந்து விழுந்தது. அதனை தொடர்ந்து கோபுரத்தை புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என். நேரு ஆகியோர் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர் அமைச்சர் சேகர்பாபு நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது, கடந்த 5ந் தேதி இரவு ஸ்ரீரங்கம்



ரெங்கநாதர் கோவில் கிழக்கு கோபுரத்தின் கொடுங்கை இடிந்து விழுந்தது. உடனடியாக மராமத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டதை தொடர்ந்து இன்று ஆய்வு செய்தோம். இப்பகுதியில் உள்ள 21 கோபுரங்களில் ஸ்திரத்தன்மை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. என்.ஐ.டி. (தேசிய தொழில்நுட்பக் கழக) வல்லுநர்கள் கோபுரத்தின் ஸ்தரத்தன்மை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இன்னும் ஓரிரு நாட்களில் அந்த ஆய்வறிக்கை கிடைக்கப்பெறும். அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும். கிழக்கு கோபுர வாசலை சீர் செய்ய ரூ.1.50 கோடி முதல் 2 கோடி வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பணிகள் ஓராண்டு காலம் நடைபெறும். இந்த பணிகள் கோவிலின் பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியானது மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

# மோசடி வழக்கில் சேலம் சிறையில் அடைக்கப்பட்ட ஜெயலலிதா கார் டிரைவர் கனகராஜின் சகோதரருக்கு திடீர் நெஞ்சுவலி

சேலம், ஆக. 9

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு சொந்தமான கொடநாடு பங்களாவில் கடந்த 2017ம் ஆண்டு கொள்ளை முயற்சி நடைபெற்றது. இதனை தடுக்க முற்பட்ட காவலாளி கொலை செய்யப்பட்டார். மேலும் இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக கூறப்பட்ட கார் டிரைவர் கனகராஜ் ஆத்தூர் அருகே மர்மமான முறையில் உயிர் இழந்தார். இந்த வழக்கை சி.பி.ஐ. போலீசார் விசாரித்து வருகிறார்கள். இதற்கிடையே கொடநாடு வழக்கில் சாட்சியங்களை கலைத்ததாக கனகராஜின் சகோதரர் தனபால் மற்றும் அவரது உறவினர் ரமேஷ் ஆகியோரை நீலகிரி போலீசார் கைது செய்தனர். இதனையடுத்து ஜாமீனில் விடுவிக்க ப்பட்டனர். இந்த நிலையில் சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே உள்ள எருமைப்பட்டி பகுதியில் உள்ள வாசுதேவனுக்கு சொந்தமான இடத்தை ரூ. 5 கோடிக்கு துரையரசு என்பவருக்கு விற்பனை செய்துள்ளார். இந்த நிலம் வாங்குவதில் இடைத்தரகராக தனபால் இருந்துள்ளார். பத்திரப்பதிவு முடிந்த நிலையில் குறிப்பிட்டப்படி துரையரசு வாசுதேவனுக்குபணத்தை கொடுக்காமல் தலைமறைவாகியுள்ளார். இதனையடுத்து வாசுதேவன் கொடுத்த புகாரின் பேரில் இடைதரகராக செயல்பட்ட தனபாலை கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மேச்சேரி போலீசார் கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர். இந்த நிலையில் சிறையில் இருந்த தனபாலுக்கு நேற்று இரவு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது.





இதனால் அவர் கதறி துடித்தார். தகவல் அறிந்த சிறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அவரை மீட்டு சிறை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் சேலம் அரசு ஆஸ்பத்திரி அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து அஸ்தம்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# திண்டுக்கல் சீனிவாசன் ஆஸ்பத்திரியில் அனுமதி

திண்டுக்கல், ஆக. 9

கழுத்தில் ஏற்பட்டுள்ள கட்டிக்கு, அறுவை சிகி ச்சை பெற வேண்டி சிகிச்சைக்காக சென்றுள்ளார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட திண்டுக்கல் சீனிவாசனுக்கு, மருத்துவம் தொடர்பான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் ஆயிரம் விளக்கு அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். கழுத்தில் ஏற்பட்டுள்ள கட்டிக்கு, அறுவை சிகிச்சை பெற வேண்டி சிகிச்சைக்காக சென்றுள்ளார். நேற்று இரவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, மருத்துவம் தொடர்பான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## 'சந்திரா'க்கு பண்ணிட்டேன் 'முகி'க்கு இனிதான் பண்ணனும்.. கீரவாணி வைத்த டுவிஸ்ட்



'சந்திரமுகி 2' திரைபடத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படத்தின் முதல் பாடல் விரைவில் வெளியாகவுள்ளது. மேலும் படிக்க இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகிவரும்திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. சமீபத்தில்லாரன்ஸ்மற்றும்கங்கனா ரனாவத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியானது. இதையடுத்து இப்படத்தின் முதல் பாடல் விரைவில்



வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட்டை கீரவாணி கொடுத்துள்ளார்.

அதன்படி, 'சந்திரமுகி 2' திரைப்படத்தின் பின்னணி இசையில் தீவிரமாக ஈடுப்பட்டிருக்கும் கீரவாணி 'சந்திராவுக்கு பின்னணி இசையமைத்துவிட்டேன். முகிக்கு இன்றைக்கு ஆரம்பிக்க வேண்டும்' என பதிவிட்டுள்ளார். இந்த பதிவை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

## கருப்பு நிற கவர்ச்சி உடையில் ரம்யா பாண்டியன்.. வைரலாகும் புகைப்படங்கள்

டம்மி டப்பாசு, ஜோக்கர், ஆண் தேவதை, இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும் உள்ளிட்ட படங்களில் நடித்தவர் ரம்யா பாண்டியன். தற்போது இவர் வெளியிட்டிருக்கும் புதிய புகைப்படத்திற்கு ஏராளமான லைக்குகள் குவிந்து வருகிறது.

தமிழில், டம்மி டப்பாசு, ஜோக்கர், ஆண் தேவதை உள்ளிட்ட படங்களில் நடித்த ரம்யா பாண்டியன், போட்டோஷூட் மூலம் மிகவும் பிரபலமானார். பின்னர் சின்னத்திரை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அவர், பிக்பாஸ் நிகழ்ச்சியின் 4வது சீசனில் போட்டியாளராக களமிறங்கி இறுதிப்போட்டி வரை முன்னேறினார். இந்நிகழ்ச்சிமூலம்அவரது ரசிகர்கள்வட்டம்பெரிதானது. இவர்நடிப்பில்வெளியான 'இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. சூர்யாவின்2டி எண்டெர்டெயின்மெண்ட் நிறுவனம்தயாரித்த இப்படத்தில் ரம்யா பாண்டியனின் நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது. ரம்யா பாண்டியன் மலையாளத்தில் நன்பகல் நேரத்து மயக்கம் என்ற படத்தில் நடித்திருந்தார். அவ்வப்போது தனது புகைப்படங்களை சமூகவலைத்தள பக்கத்தில் வெளியிட்டு ரசிகர்களைகவர்ந்து வரும் ரம்யாபாண்டியன், தற்போது கருப்புநிறகவர்ச்சி உடையில் இருக்கும்புகைப்படங்களைவெளியிட்டுள்ளார். இந்தபுகைப்படங்கள்லைக்குகளை குவித்து தற்போது வைரலாகி வருகிறது.

## தெய்வதிருமகள் பட காட்சியை பார்த்து தேம்பி தேம்பி அழுத நபர்.. ஜிவி பிரகாஷ் பகிர்ந்த டுவீட் வைரல்



விக்ரம், அனுஷ்கா உள்ளிட்ட பலர் நடிப்பில் கடந்த 2011ம் ஆண்டு வெளியான படம் தெய்வதிருமகள். இப்படத்தை இயக்குனர் ஏ.எல்.விஜய் இயக்கியிருந்தார்.

ஏ.எல்.விஜய்இயக்கத்தில்கடந்த2011ம்ஆண்டுவெளியானபடம்தெய்வதிருமகள். விக்ரம், அனுஷ்கா, அமலாபால், நாசர், சந்தானம், எம்.எஸ்.பாஸ்கர் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியிருந்த இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. அப்பாக்கும் மகளுக்கும் உள்ள பிணைப்பை மையப்படுத்தி வெளியான இப்படம் பலரையும் உருக வைத்தது. குறிப்பாக படத்தின் கிளைமேக்ஸ் காட்சியும் அதில் இடம்பெற்ற ஜிவி பிரகாஷின் இசையும் இன்றளவும் கண்கலங்க வைக்கும் காட்சியாக உள்ளது. இந்நிலையில் தெய்வதிருமகள் படத்தின் கிளைமேக்ஸ் காட்சியை பார்த்த நபர் ஒருவர் தேம்பி தேம்பி அழும் வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இதனை இசையமைப்பாளர் ஜிவி பிரகாஷ் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதற்கு பலரும் லைக்குகளை குவித்து வருகின்றனர்.

## அம்பேத்கரின் குரலை ஓங்கி ஒலிக்க விட்டேன்.. ஃபகத் பாசிலுக்கு வாழ்த்து தெரிவித்த மாரி செல்வராஜ்

மலையாள திரையுலகின் முன்னணி நடிகரான ஃபகத் பாசில், சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான வேலைக்காரன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். அதன்பின்னர் சூப்பர் டீலக்ஸ், விக்ரம் படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். சமீபத்தில் மாரி செல்வராஜ் இயக்கத்தில் வெளியான மாமன்னன் படத்தில் ரத்தினவேல் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். ஃபகத் பாசிலின் பிறந்தநாளான இன்று அவருக்கு வாழ்த்து தெரிவித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு வருகின்றனர். அதன்படி இயக்குனர் மாரி செல்வராஜ், ஃபகத் பாசிலுக்கு வாழ்த்து தெரிவித்து நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார்.



அதில், வணக்கம் பகத் சார்!!! உங்கள் இரண்டு கண்களும் எனக்கு அவ்வளவு பிடிக்கும். அந்த இரண்டு கண்களை வைத்துதான் என் ரத்தினவேல் கதாபாத்திரத்தை உருவாக்கினேன். ஒரு கண்ணில் பல தலைமுறைகளாக சொல்லிக்கொடுக்கப்பட்ட வாழ்க்கைமுறை சரி என்ற நம்பிக்கையை தீர்க்கமாக வையுங்கள் என்றேன். மற்றொரு கண்ணில் புதிய தலைமுறைகள் முளைத்து வந்து கேட்கும் வாழ்வியல் முரணுக்கான ஆக்ரோஷ கேள்விகளையும் குழப்பங்களையும் வையுங்கள் என்றேன். மிகச்சரியாக இரண்டு கண்களிலும் இரண்டு நேரெதிர் வாழ்வை வைத்து என் படம் முழுக்க அப்படியே பயணித்தீர்கள்.

இறுதியாக இரண்டு கண்களையும் மூட சொன்னேன். ஏனென்று கேட்காமல் மூடினீர்கள். உங்கள் நெஞ்சுக்கூட்டுக்குள் டாக்டர்.அம்பேத்கரின் குரலை ஓங்கி ஒலிக்க விட்டேன். அவ்வளவுதான் உடல் சிலிர்த்து நீங்கள் ஓடிவந்து என்னை அணைத்துக்கொண்ட அந்த நொடி தீரா பரவசத்தோடு சொல்கிறேன். இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் பகத் சார் என்று பதிவிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் யார் சிறந்தவர்: ரோகித் பதிலுக்கு வாய்விட்டு சிரித்த மனைவி வைரலாகும் வீடியோ



பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களில் யார் சிறந்த பந்து வீச்சாளர் என ரசிகர் ஒருவர் ரோகித் சர்மாவிடம் கேள்வி கேட்டார். அமெரிக்காவில் நடந்த ஒரு நிகழ்வின் போது ஒரு ரசிகரின் கேள்விக்கு தனது பதிலால் அனைவரையும் மிகவும் கவர்ந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனாக ரோகித் சர்மா இருந்து வருகிறார். 36 வயதான அவர் சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இடம்பெற்றார். அதை இந்தியா 21 என்ற கணக்கில் கைப்பற்றியது. இளம் வீரர்களை வளர்க்கவும், வரவிருக்கும் ஆசிய கோப்பை மற்றும் உலகக் கோப்பைக்கு முன்னதாக பல்வேறு சேர்க்கைகளை முயற்சிக்கவும், ரோகித் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டிகளில் விளையாடவில்லை. ஹர்திக் பாண்ட்யா தலைமையிலான இந்திய அணி தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியுடன் டி20 தொடரில் விளையாடி வரும் நிலையில், விடுமுறையில் இருக்கும் ரோகித் சர்மா, அமெரிக்காவில் நடந்த ஒரு நிகழ்வின் போது ஒரு ரசிகரின் கேள்விக்கு தனது பதிலால் அனைவரையும் மிகவும் கவர்ந்துள்ளார். பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களில் யார் சிறந்தவர் என ரசிகர் ஒருவர் ரோகித் சர்மாவிடம் கேள்வி கேட்டார். அதற்கு பதிலளித்த அவர் அனைவருமே சிறந்த பந்து வீச்சாளர்தான். யாரையும்குறிப்பிட்டுசொல்லமுடியாது. நீங்கள்பெரியசர்ச்சையைஎதிர்பார்த்துஇந்தகேள்வியைகேட்டுள்ளீர்கள் என அவர் பதலளித்தார்.

## முதன்மை ஸ்பான்சர் உரிமை: ஒரு ஆட்டத்துக்கான அடிப்படை விலை ரூ.2.4 கோடியாக குறைப்பு பிசிசிஐ

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) இந்தியாவில் நடைபெறும் சர்வதேச போட்டியின் முதன்மை ஸ்பான்சருக்கான அடிப்படை விலையை நிர்ணயம் செய்து அறிவித்துள்ளது. இதற்கு முன்பு ஒரு ஆட்டத்துக்கான அடிப்படை விலை ரூ.3.8 கோடியாக இருந்தது. இதை தற்போது ரூ.2.4 கோடியாக பி.சி.சி.ஐ. குறைத்துள்ளது. 2019 முதல் 2023 வரை முதன்மை ஸ்பான்சராக இருந்த பே.டி.எம். மாஸ்டர் கார்டு ஒரு ஆட்டத்துக்கு ரூ.3.8 கோடி செலுத்தி இருந்தது. செப்டம்பர் முதல் 2026 ஆகஸ்டு வரை 3 ஆண்டுகளுக்கான ஒட்டு மொத்த முதன்மை ஸ்பான்சர் அடிப்படை விலை ரூ.134 கோடியாகும். 15 டெஸ்ட், 15 ஒருநாள், 26 இருபது ஓவர் போட்டிகள் இதில் அடங்கும். இதற்கான ஏல நடைமுறை வருகிற 21ந் தேதி தொடங்குகிறது.




## அகில இந்திய புச்சிபாபு கிரிக்கெட்: தமிழக அணிகளுக்கு விஜய் சங்கர், ஷாருக்கான் கேப்டன்

அகிலஇந்தியபுச்சிபாபுகிரிக்கெட்போட்டிவருகிற15ந்தேதிசென்னையில் தொடங்குகிறது. இந்தப்போட்டியில் பங்கேற்கும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க பிரசிடென்ட் லெவன், தமிழ்நாடு கிரிக்கெட் சங்க லெவன் அணிகளை தமிழ்நாடு சீனியர் தேர்வு குழு அறிவித்துள்ளது. டி.என்.சி.ஏ. பிரசிடென்ட் லெவனுக்கு விஜய் சங்கரும், டி.என்.சி.ஏ. லெவனுக்கு ஷாருக்கானும் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு கிரிக்கெட் சங்க பிரசிடென்ட் லெவன் அணி வருமாறு: விஜய் சங்கர் (கேப்டன்), சாய்கிஷோர் (துணை கேப்டன்), அஜித்ராம், கணேஷ், சச்சின், விமல்குமார், லக்சய் ஜெயின், அஜிதேஷ், சந்தீப் வாரியர், டிரிலோக், எம்.முகமது, ராகுல், கிரண், ரித்திக் ஈஸ்வரன், அதிக்உர்ரகுமான், முகமது அலி. தமிழ்நாடு கிரிக்கெட் சங்க லெவன் அணி வருமாறு: ஷாருக்கான்(கேப்டன்), சந்தோஷ் குமார், ஜிதேந்திர குமார், நிதிஷ் ராஜகோபால், மாதவராவ் பிரசாத், சித்தார்த், ராமஅரவிந்த், அஜய் கிருஷ்ணன், சுபங் மிஸ்ரா, குருராக வேந்திரன், சச்சின் ரதி, சுப்பிரமணியம், சரவண குமார், கர்பன்த்சிங், விக்னேஷ், சாமுவேல் ராஜ். இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீரரான ஆர்.அஸ்வினுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. வாஷிங்டன் சுந்தர், அயர்லாந்து போட்டியில் ஆடுவதில் தேர்வு பெற்றுள்ளார். சாய் சுதர்ஷன், பிரகோஷ், ரஞ்சன் பவுல், ஜெகதீசன் ஆகியோர் தேசிய கிரிக்கெட் அகாடமி பயிற்சி முகாமுக்கு தேர்வு பெற்றுள்ளனர். பாபா அபராஜித்துக்கு திருமணம் நடைபெறுவதால் 20ந் தேதி முதல் 31ந் தேதி வரை பங்கேற்க மாட்டார். பாபா இந்திரஜித் 2வது போட்டியில் இருந்து ஆடுவார்.



## ஆசிய சாம்பியன்ஷிப் கோப்பை ஹாக்கி: இந்தியாபாகிஸ்தான் நாளை பலப்பரீட்சை

7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடி யத்தில் நடைபெற்று வருகி றது. இதில் 6 நாடுகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் அடிப் படையில் முதல் 4 இடங் களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். நேற்றுடன் ஒவ்வொரு அணியும் 4 ஆட்டத்தில் விளையாடிவிட்டன. இந்தியா (10புள்ளி) மலேசியா (9) ஆகிய அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. சீனா (1) வாய்ப்பை இழந்தது. நடப்பு சாம்பியன் தென் கொரியா (5), முன்னாள் சாம்பியன் பாகிஸ்தான் (5), ஜப்பான் (2) ஆகிய 3 அணிகள் எஞ்சிய 2 இடத்துக்கான போட்டியில் உள்ளன. ஹர்மன்பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் சீனாவை 72 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. 2வது போட்டியில் ஜப்பானுடன் 11 என்ற கணக்கில் டிரா செய்தது 3வது ஆட்டத்தில் மலேசியாவை 50 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. 4வது போட்டியில் தென் கொரியாவை 21 என்ற கணக்கில் வென்றது, இந்திய அணி 5வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை நாளை (9ந் தேதி ) எதிர்கொள்கிறது. இரவு 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடக்கிறது. 3 வெற்றி, 1 டிராவுடன் 10 புள்ளிகளுடன் முதல் இடத்தில் இருக்கும் இந்திய அணி பாகிஸ்தானை வீழ்த்தி 4வது வெற்றியை பெறும் ஆர்வத்தில் இருக்கிறது. இந்திய அணி ஏற்கனவே அரை இறுதிக்கு முன்னேறி விட்டதால் நெருக்கடி இல்லாமல் விளையாடும். பாகிஸ்தான் அணியை பொறுத்தவரை இந்தியாவுடன் 'டிரா' செய்தாலே அரை இறுதிக்கு தகுதி பெற்று விடும். கடைசி ஆட்டம் என்பதால் அந்த அணி அதற்கு ஏற்ப விளையாடலாம். இரு அணிகளும் மோதிய 178 போட்டியில் இந்தியா 64ல், பாகிஸ்தான் 82ல் வெற்றி பெற்றுள்ளன. 32 ஆட்டம் டிரா ஆனது. கடைசியாக கடந்த ஆண்டு ஜகார்தாவில் இரு அணிகளும் மோதிய ஆசிய கோப்பை போட்டி 11 என்றகணக்கில்டிரா ஆனது. 2021ம் ஆண்டு டாக்காவில் நடந்த ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையில் இந்தியா 2 ஆட்டத்திலும் ( 31, 43 ) வெற்றி பெற்று இருந்தன. நாளை நடைபெறும் மற்ற 'லீக்' ஆட்டத்தில் ஜப்பான்சீனா (மாலை 4 மணி) தென் கொரியாமலேசியா (மாலை 6.15 மணி) அணிகள் மோதுகின்றன. நாளையுடன் 'லீக்' ஆட்டங்கள் முடிகிறது. 11ந் தேதி அரைஇறுதி போட்டிகளும், 12ந் தேதி இறுதி ஆட்டமும் நடக்கிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.